# ஸுன்னா பற்றி தெளிவு பெறுவது எப்படி?

நூலாசிரியர் :
கலாநிதி யூ.எல்.ஏ. அஷ்ரப் Ph.D (Al-Azhar)
தலைவர் - தாருல் ஹதீஸ்
உதவிப் பேராசிரியர்
மன்னர் காலித் பல்கலைக்கழகம்
சவூதி அரேபியா

வெளியீடு :
தாருல் ஹதீஸ்
கொழும்பு,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

دار الحديث

DARUL HADITH

لقد كان لكم في رسول الله أسوة حسنة

# ஸுன்னா பற்றி தெளிவு பெறுவது எப்படி?

நூலாசிரியர்:

கலாநிதி.யூ.எல்.ஏ. அஷ்ரப் (Ph.D.Al-Azhar)

தலைவர் – தாருல் ஹதீஸ்

உதவிப் பேராசிரியர்

மன்னர் காலித் பல்கலைக்கழகம்

சவூதி அரேபியா.

Gift of
The Islamic Center
P.O.Box - 10 Kattankudy-30100 SRI LANKA
அன்பளிப்பு
இஸ்லாமிய நிலையம்
த.பெ.இல 10 காத்தான்குடி – 30100 ஸ்ரீலங்கா

வெளியீடு:

தாருல் ஹதீஸ்

கொழும்பு

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : Sunnah Pattri Thelivu Peruvathu Eppadi

Author : Dr. U.L.A. Ashraff Ph.D. (Al - Azhar)
Asst. Professor
King Khalid University
Saudi Arabia

| | | |
|---|---|---|
| Copies | : | 2000 |
| First Edition | : | June 2003 |
| Printers | : | A.J. Prints |
| Type Setting | : | Hikma Prints |
| Publishers | : | "Darul Hadith"<br>3A/1, 8th Lane,<br>Galle Road,<br>Colombo -03. |

ISBN 955-98293-0-0

(Free Issue)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

"ஸுன்னா பற்றி தெளிவு பெறுவது எப்படி?" எனும் தலைப்பிலான இச்சிறு நூலை "தாருல் ஹதீஸ்" அதன் முதல் வெளியீடாக வெளிக்கொணர வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கு நாம் நன்றி கூறுகின்றோம். அல்ஹம்துலில்லாஹ். காலத்தின் தேவையையுணர்ந்து ஹதீஸ் துறையில் மிகவும் தேர்ச்சி பெற்ற கலாநிதி U.L. அஹ்மத் அஷ்ரப் அவர்கள் இந்நூலை மிகவும் இலகு நடையில் ஆக்கித்தந்துள்ளார்கள். "சுன்னா" பற்றிய தெளிவும், ஷரீஆவில் அதன் முக்கியத்துவம் பற்றிய அறிவுமில்லாத பலர், முஸ்லிம் உம்மத்தை தவறாக வழிநடத்த முனைகின்ற இக்காலத்தில், பலரும் சுன்னா பற்றிய சரியான விளக்கத்தைப்பெற இக்கைநூல் பேருதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் ஓர் உன்னத சமுதாயத்தின் உருவாக்கத்திற்குப் போதுமானவைகளாக இருக்க, அவற்றைச் சரியாக விளங்காத சிலர் ஷரீஆவின் பேரால் சுன்னாவுக்கு முரணாக பல நூதன அனுஷ்டானங்களை (பித்ஆ) சமூகத்தில் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர். மற்றும் சிலரோ "ஆதத்" எனும் வழக்காறுகளுக்கும் சுன்னாவுக்கு மிடையிலான வித்தியாசம் புரியாமல், பல தவறான மனப்பதிவுகளை சமூகத்தில் விதைத்துக்கொண்டு இருக்கின்றனர். பெரும்பாலும் சுன்னாவின் வரையறைகள் பற்றிய அறிவின்மையே இத்தகைய தவறுகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றது.

எனவே, சத்தியத்தை அடையவேண்டும் ஷரீஆவை விளங்கவேண்டும். எனும் நன்நோக்குடன் இந்நூலை வாசிக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் சுன்னா பற்றிய தனது கண்ணோட்டத்தை சரிசெய்து கொள்ளவும், அக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் தனது வாழ்க்கையை ஷரீஆவின் வரையறைக்குள் வகுத்துக்கொள்ளவும் இந்நூல் பெரிதும் உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எமது இம்முயற்சியை அல்லாஹ் அங்கீகரித்து அருள்புரிவானாக.

2-2-2003

தாருள் ஹதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இஸ்லாமிய சமுதாயம், முன்னேற்றம் அடைவதற்கு மூன்று அடிப்படை நிபந்தனைகள் உள்ளன. அவை பின்வருமாறு:

(அ) குர்ஆன், ஹதீஸ் ஆகிய மூலாதாரங்களை உரிய முறையில் விளங்குதல்.

(ஆ) விளங்கிய குர்ஆன், ஹதீஸ் சட்டங்களை அமுல்படுத்தல்.

(இ) உலகக் கல்வியில் பாரிய முன்னேற்றத்தை அடைதல்.

இம்மூன்று அம்சங்களும், முஸ்லிம் சமுதாயத்தில் ஏற்படுமெனில், இஸ்லாத்துக்கு எதிரான சவால்களை சமாளிக்கமுடியும்.

ஆனால், தற்போது முஸ்லிம்களின் நிலையை நோக்கும் போது, இம்மூன்று விடயங்களில் பின்தங்கியிருப்பதை பார்க்கின்றோம். முதலாவது நிபந்தனையை பொறுத்தவரை, குர்ஆன், ஹதீஸ் பற்றிய அறிவு முஸ்லிம்கள் மத்தியில் குன்றி, தனிநபர் வழிபாடு மேலோங்கி காணப்படுகின்றது. இரண்டாவது நிபந்தனையைப் பொறுத்தவரை பெரும்பாலான இஸ்லாமிய நாடுகள் "ஷரீஆ" வின் சட்டத்தை அமுல்படுத்தாமல், அந்நிய மதத்தவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மதசார்பற்ற கொள்கையை கடைப்பிடிப்பதைப் பார்க்கின்றோம். இறுதியாக, உலகக் கல்வியைப் பொறுத்தமட்டில், சாதாரண முன்னேற்றம் காணப்பட்டாலும், இஸ்லாம் எதிர்நோக்கும் சவால்களை நோக்கின், போதாதென்றே கூறமுடியும்.

எனவே, முதலாவது நிபந்தனை நிறைவேறுவதில் பங்களிக்கும் முயற்சியில் இஸ்லாத்தின் இரு மூலாதாரங்களில் ஒன்றான ஹதீஸ் கலையில், அல்லாஹ் எனக் கருளிய கல்வி மூலம், முஸ்லிம் சமூகத்துக்கு சேவை செய்வது எனது கடமை எனக் கருதி "தாறுல் ஹதீஸ்" என்ற கல்வி நிறுவனம் உருவாக்கப்பட்டது. ஹதீஸ் கலையில் பாண்டித்தியம் பெற்றவர்களை உருவாக்குவது அதன் குறிக்கோளாகும்.

இன்ஷாஅல்லாஹ் இந்நோக்கை அடைய பல்கலைகழகத்தரத்திலான ஹதீஸ் கல்லூரி உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் அதற்கு அருள்புரிவானாக!

மேலும், ஹதீஸ்கலையின் சில மூலதத்துவங்கள் தழுவியதாக இச்சிறுநூலை எழுதி, ஹதீஸ்கலை அறிவை மேலும் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஆவலையும் ஏற்படுத்த வேண்டும் என்பது எங்கள் ஆவலாகும்.

அல்லாஹ் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் வாழ அருள்புரிவானாக!

கலாநிதி யூ.எல்.ஏ. அஷ்ரப் (Ph.D.Al-Azhar)
உதவிப்பேராசிரியர்
மன்னர் காலித் சர்வகலாசாலை
சவூதி அரேபியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

إن الحمد لله نحمده ونستعينه ونستغفره ونعوذ بالله من شرور أنفسنا ومن سيئات أعمالنا، من يهده الله فلا مضل له، ومن يضلل فلا هادي له وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له، وأشهد أن محمدا عبده ورسوله أما بعد.

فإن خير الحديث كتاب الله تعالى، وخير الهدي هدي محمد صلى الله عليه وسلم، وشر الأمور محدثاتها، وكل محدثة بدعة، وكل بدعة ضلالة، وكل ضلالة فى النار.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸுன்னா என்றால் என்ன ?

ஸுன்னா என்ற அறபுப்பதத்திற்கு, பாதை, வழிமுறை என்பது கருத்தாகும். ஹதீஸ்கலை வல்லுனர்கள் (சுன்னா) என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றனர்:

நபி (ﷺ) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், உடல் அமைப்புமுறை, குண நெறி ஆகியவைகளாகும். இவை நபியவர்களுக்கு "தூது" கிடைப்பதற்கு முன்பு நிகழ்ந்தாலும் அல்லது பின்பு நிகழ்ந்தாலும், "ஸுன்னா" என்றே சொல்லப்படும்.

இதே கருத்தைத்தான் "ஹதீஸ்" என்ற பதமும் கொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் "அல்கிதாப், வஸ்ஸுன்னா", "அல்குர்ஆன் வல்ஹதீஸ்" என்று பிரயோகிப்பது இஸ்லாமிய அறிஞர்களின் வழக்கமாகும்.

எனவே ஹதீஸ் கலை வல்லுனர்கள் நபி (ﷺ) அவர்களைப்பற்றிய சகல விபரங்களையும் திரட்டுவதை நோக்காகக் கொண்டிருந்தார்கள். சொற்கள், செயல்கள், அங்கீகாரங்கள் இவைகளில் எதை ஆதாரமாகக் கொள்வது எதை ஆதாரமாகக் கொள்ள முடியாது என்பதை வேறுபடுத்தும்வரைவிலக்கணங்களைத் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியில் இவர்கள் இறங்கவில்லை, இந்தப்பணியில் உஸூலிய்யூன் (இஸ்லாமிய சட்ட மூலதத்துவ அறிஞர்கள்) ஈடுபட்டார்கள். எனவே அவர்கள் ஸூன்னா என்பதற்கு பின்வரும் வரைவிலக்கணத்தை முன்வைக்கிறார்கள்: சுன்னா என்பது நபி (ﷺ) அவர்கள் நபித்துவம் கிடைத்ததன் பின்பு கூறிய, செய்த, அங்கீகாரம் வழங்கிய விடயங்களாகும்.

எனவே நபித்துவத்திற்கு முந்திய, நபி (ﷺ) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகியவைகள் ஆதாரமாக அமையாது. இவ்விடயத்தில் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு கிடையாது. இதன் அடிப்படையில் நபி (ﷺ) அவர்கள் நபித்துவத்திற்கு முன்பு ஹிறா குகையில் தியானத்தில் இருந்தார்கள். என்பதை முன்வைத்து சில சூபித்துவவாதிகள் காடுகளிலும் குகைகளிலும் மலைகளிலும் தியானத்தில் இருப்பது ஆகும் எனக் கூறுவது அறியாமையாகும். மேலும் நபி (ﷺ) அவர்கள் நபித்துவம் கிடைத்ததன்பின்பு பலவருடங்கள் மக்காவில் தங்கியிருந்தார்கள். மதீனாவிற்கு ஹிஜ்றத் சென்ற பின் பலதடவை மக்காவை தரிசித்திருக்கிறார்கள் இந்தச் சந்தர்ப்பங்களில் நபி (ﷺ) அவர்களோ அல்லது அவர்களின் ஸஹாபாத் தோழர்களோ ஹிறா குகையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசிக்கவுமில்லை, அங்கே எவ்வித வணக்கத் திலும் ஈடுபடவுமில்லை.

## புகஹாக்கள் (மார்க்கச்சட்ட) வல்லுனர்களின் வரைவிலக்கணம்

புகஹாக்கள் ஸுன்னா என்பதற்கு வரைவிலக் கணத்தை பின்வருமாறு கூறுகிறார்கள்: ஒரு விடயம் நபி (ﷺ) அவர்களின் காலத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கட்டாயக் கடமை அல்லது விரும்பத்தக்கது, என்பதற்கு குர்ஆன் ஹதீஸில் ஆதாரம் காணப்படுமாயின் அது ஸுன்னா ஆகும்.

இவ்வரைவிலக்கணத்தின்படி ஸுன்னா என்பது "பித்அத்" என்பதற்கு எதிர்ச் சொல்லாகும். ஏனெனில் பித்அத் என்றால், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழாத கடமை, அல்லது விரும்பத்தக்கது என்பதற்கு ஆதாரம் இல்லாத ஒரு விடயமாகும். எல்லா "பித்அத்"களும் வழிகேடுகளாகும். குர்ஆன் ஹதீஸுக்கு முரண்படும் தரத்தைப் பொறுத்து அந்த பித்அத்தின் தரமும் வேறுபடும். அதாவது பித்அத், இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களுக்கு முரண்படும்போது "பித்அத் முகப்பிரா" (மதமாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது) என்று சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக எல்லாம் அவனே எல்லாப் பொருட்களின் உருவங்களில் அல்லாஹ் தோன்றியிருக்கிறான் அல்லது அவனே எல்லாம் (Pantheism) அல்லாஹ் ஏழுவானங்களைக் கடந்துள்ள அர்ஷ் என்ற சிம்மாசனத்தில் உள்ளான் என்பதை நிராகரித்தல், இறைவன் எங்கும் நிறைந்தவன் என்று நம்புதல், மரணித்த அல்லது உயிருடன் மறைந்துள்ள நல்லடியார்களிடத்தில் தேவைகளைக் கேட்டல், போன்றவை (ரித்தத்) மதமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய பித்அத்களாகும்.

இஸ்லாமிய அடிப்படை அம்சங்களுக்கு பித்அத் முரண்படாவிட்டால், அதற்கு "பித்அத் முப்ஸ்ஸிகா" பாவத்தை ஏற்படுத்தக் கூடிய பித்அத் என்று சொல்லப்படும். உதாரணமாக நல்லடியார்களின் கப்றுகளில் பள்ளி வாயில்கள், தர்ஹாக்கள் கட்டுதல், கப்றுகளைத் தரிசிக்க புனித யாத்திரைகள் செய்தல், திக்று செய்யும்போது நடனம் ஆடுதல், நபி ﷺ அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுதல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

எனவே பித்அத் ஹஸனா (அழகிய பித்அத்) என்பது இஸ்லாத்தில் கிடையாது. அதற்கு பின்வருபவைகளை ஆதாரமாகக் கொள்ளலாம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

عن عائشة رضي الله عنها قالت: قال رسول الله صلى الله عليه وسلم: من أحدث في أمرنا هذا ما ليس منه فهو رد. البخاري كتاب الإصلاح بين الناس٢٦٩٧ (فتح الباري٥ /٣٥٥) مسلم ١٢ / ٢٤٢ - كتاب الأقضية- باب نقض الأحكام الباطلة٤٤٦٧

وفي رواية لمسلم ٤٤٦٨ : من عمل عملا ليس عليه أمرنا فهو رد.

(1) எங்களின் இந்தவிடயத்தில் (மார்க்கத்தில்) யாராவது புதிய விடயத்தை ஏற்படுத்தினால் அந்த விடயம் நிராகரிக்கப்பட்டதாகும். என்று நபி (ﷺ) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள். (புஹாரி ஹதீஸ் இல: 2697, முஸ்லிம் ஹதீஸ் இல: 4467) இதன் மூலம் மார்க்க விடயங்களில் புதிய விடயங்களை ஏற்படுத்தக்கூடாது என்பதும் ஏனைய விடயங்களில் புதிய கண்டுபிடிப்புக்கள் செய்வது ஆகும் என்பதும் தெளிவாகிறது.

عن جابر رضي الله عنه قال : قال رسول الله صلى الله عليه وسلم أما بعد فإن خير الحديث كتاب الله وخير الهدي هدي محمد صلى الله عليه وسلم وشر الأمور محدثاتها وكل بدعة ضلالة .

مسلم٦ / ٣٩٣ - كتاب الجمعة باب رفع الصوت في الجمعة٢٠٠٢

وفي رواية للنسائي برقم : ١٥٧٧ : وكل ضلالة في النار



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சிறந்த வார்த்தை அள்ளாஹ்வின் வேதம், அழகிய வழிகாட்டல் முஹம்மத் (ﷺ) அவர்களின் வழிகாட்டல், தீயவிடயங்கள், (மார்க்கத்தில்) புதிதாக ஏற்படுத்தப்பட்டவையாகும், பித்அத் எல்லாம் வழிகேடுகளாகும், என நபி (ﷺ) அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்தில்லாஹ் (رضي الله عنه) அவர்கள் கூறுகிறார்கள். (முஸ்லிம் ஹதீஸ் இல: 2002) நஸாயீ (றஹ்) அவர்களின் அறிவிப்பில் பின்வரும் விடயம் மேலதிகமாகக் காணப்படுகிறது. "வழிகேடுகளெல்லாம் நரகத்திலதான்."

قال ابن عمر رضي الله عنه: كل بدعة ضلالة وإن رآها الناس حسنة

رواه محمد بن نصر المروزى فى كتابه " السنة "٨٣

(3) பித்அத்களை மக்கள் அழகானது எனக் கருதினாலும் எல்லா பித்அத்களும் வழிகேடுதான் என்று அப்துள்ளாஹ் பின் உமர் (رضي الله عنه) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: அஸ்ஸுன்னா ஆசிரியர் முஹம்மத்பின் நஸ்ர் அல்-மர்வஸி ஹதீஸ் இல: 82

பித்ஆ ஹஸனா உண்டு என வாதிப்பவர்கள் பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் கொள்கிறார்கள்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

عن جرير بن عبدالله (رضي الله عنه) ، قال : قال رسول الله (ﷺ): من سن في الإسلام سنة حسنة فله أجرها وأجر من عمل بها بعده

(رواه مسلم -٢٣٤٨/٦٧٤٤)

யாராவது இஸ்லாத்தில் நன்மையுள்ள வழிமுறையை ஏற்படுத்தினால் அதன் நன்மையும், அவரை பின்பற்றிச் செய்கின்றவரின் நன்மையும் அவருக்கு உண்டு என நபி (ﷺ) அவர்கள் கூறியதாக ஜரீர் பின் அப்தில்லாஹ் (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கின்றார்கள். முஸ்லிம் ஹதீஸ் இல: 2348 / 6744

இந்த ஹதீஸை பித்அத் ஹஸனாவுக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஹதீஸில் சொல்லப்பட்ட நன்மையுள்ள வழிமுறை என்பது, இஸ்லாத்தில் ஏற்கனவே சொல்லப்பட்ட வழிமுறையை குறிக்குமே தவிர நாங்களாகவே ஏற்படுத்தும் வழிமுறைகளைக் குறிக்காது ஏனெனில், ஒரு விடயம் நன்மையானது, தீமையானது என்பதை குர்ஆன் ஹதீஸ் மூலம் தான் தீர்மானிக்க வேண்டும். எங்கள் சிந்தனையால் தீர்மானிக்க முடியாது. இதை பின்வரும் குர்ஆன் வசனம் வலியுறுத்துகிறது.

قال الله تعالى : أم لهم شركاء شرعوا لهم من الدين ما لم يأذن به الله

(سورة الشورى - ٢١)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் அனுமதிக்காத விடயங்களை சட்டவாக்கம் செய்யும் இணையாளர்கள் அவர்களுக்கு உண்டா? என மறுத்து இறைவன் கூறுகிறான். (அஷ்ஷூரா: 21)

மேலும் நபி (ﷺ) அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட ஹதீஸை கூறிய சந்தர்ப்பத்தைக் கவனத்தில் எடுக்கும் போது, இஸ்லாத்தில் ஏற்கனவே கூறப்பட்ட நன்மையான விடயத்தைத்தான் குறிக்கின்றது என்பது தெளிவாகிறது. அதே ஹதீஸில், பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

நபி (ﷺ) அவர்களிடம் கறுப்பு, வெள்ளை புள்ளிகள் உள்ள கம்பளி போர்த்திய, நிர்வாணமான, கால்களுக்கு பாதரட்சைகள் அணியாத சில காட்டரபிகள் வந்தார்கள். இவர்களின் நிலைகண்டு இரங்கிய நபி (ﷺ) அவர்கள் "ஸதகா" (தர்மம்) செய்யுமாறு மக்களை கேட்டுக் கொண்டார்கள் ஆனால், யாரும் தர்மம் கொடுக்க முன்வரவில்லை. சிறிது நேரம் கழித்து அன்ஸாரிகளில் ஒருவர், வெள்ளிகள் நிறைந்த பை ஒன்றைக் கொண்டு வந்து தர்மம் செய்தார். இதைக் கண்ட ஏனைய மக்கள் உற்சாகம் அடைந்து தர்மம் செய்தனர். மகிழ்வடைந்த நபி (ﷺ) அவர்கள் "யாராவது இஸ்லாத்தில் நன்மையுள்ள வழிமுறையை ஏற்படுத்தினால், அதன் நன்மையும், அவரைப் பின்பற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றவரின் நன்மையும் அவருக்கு உண்டு எனக் கூறினார்கள்.

இச்சம்பவத்தின் மூலம், மக்கள் தர்மம் கொடுக்கக் தயங்கிய போது அன்ஸாரிகளைச் சேர்ந்த ஒரு மனிதர் தர்மம் செய்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்தமையினால் அவருக்கு அதே போல் நன்மை கிடைத்தது என்பது தெளிவாகிறது. தர்மம் என்பது இஸ்லாத்தில் சொல்லப்பட்ட விடயமாகும் அது ஒரு புதிய பித்அத் அல்ல. எனவே ஹதீஸில் தெளிவான விளக்கம் என்னவெனில் இஸ்லாம் கற்றுத்தந்த நன்மையுள்ள விடயங்களில் நாங்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது என்பதாகும்.

சில இமாம்கள் பித்அத்தை ஐந்து வகைகளாக பிரித்திருக்கிறார்கள். இவ்வகைப்படுத்தல், பாஷை ரீதியானதே தவிர மார்க்க ரீதியானதல்ல. ஏனெனில், வாஜிபான ,முஸ்தஹப்பான, முபாஹான பித்அத்களுக்கு அவர்கள் கொண்டுவந்த உதாரணங்கள் , பித்அத்களின் வரைவிலக்கணத்தில் அடங்காது.( அல்பதாவா ஹதீதியா - ஹைதமி, பக்கம் - 281)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபி (ﷺ) அவர்களுக்கு வழிப்படுவதன் சட்டம்

அள்ளாஹுதஆலா குர்ஆனில் கூறியவைகளுக்கு வழிப்படுவது கடமைபோல நபி (ﷺ) அவர்களின் ஏவல் விலக்கல்களுக்குக் கட்டுப்படுவதும் கடமையாகும். இவ்விடயத்தில் இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இல்லை. இதை பின்வரும் குர்ஆன் வசனங்கள் வலியுறுத்துகின்றன.

قال الله تعالى : أطيعوا الله وأطيعوا الرسول (سورة المائدة: ٩٢)

அள்ளாவுக்கு வழிப்படுங்கள், திருத்தூதருக்கு வழிப்படுங்கள் (ஸூரதுல் மாயிதா : 92)

قال الله تعالى : فإن تنازعتم في شيئ فردوه إلى الله والرسول (سورة النسآء: ٥٩)

ஏதேனுமொரு விடயத்தில் நீங்கள் கருத்து வேற்றுமை கொண்டால், அதை அள்ளாஹ், திருத்தூதர் ஆகியோர்களின் (தீர்ப்புக்குத்) திருப்புங்கள் (ஸூரதுன் நிஸா 59)

எனவே வஹி (இறைசெய்தி) என்பதை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. வணக்கமாக ஓதப்படும் வஹி – அது அல்குர்ஆன்.
2. வணக்கமாக ஓதப்படாத வஹி – அதுதான் ஹதீஸ் அல்லது ஸுன்னா.

பொருள் விளங்கினாலும், விளங்காவிட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனை ஓதுவது, ஓதக்கற்றுக்கொடுப்பது, மனனமிடுவது வணக்கமாகும். அதே போல் குர்ஆன் மொழி பெயர்ப்புக்களை வாசிப்பது, அதன் சட்டங்களை அறிவது, கற்றுக் கொடுப்பது மேலான வணக்கமாகும்.

ஹதீஸ் கிரந்தங்களை வாசிப்பது, விளங்குவது, கற்றுக்கொடுப்பது, மனனமிடுவது வணக்கமாகும், ஆனால் இந்நோக்கங்கள் இல்லாமல் வெறுமனே ஓதுவது வணக்கமல்ல பித்அத்தாகும். உதாரணமாக, சில மஸ்ஜித்களில் வருடா வருடம் இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் எழுதிய "அல் - ஜாமிஉஸ் ஸஹீஹ்" என்ற நூலை, வட்டமாகயிருந்து ஓதி தமாம் செய்கிறார்கள், பொது மக்கள் இவ்வைபவங்களுக்கு நேர்ச்சைகள் சமர்ப்பிக்கிறார்கள், இதன் மூலம் அவர்களின் தேவைகள் நிறைவேறுகின்றன என நம்புகிறார்கள், மாடு, ஆடு, கோழி போன்ற நேர்ச்சைப் பொருட்கள், பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படுகின்றன. இது வழிகெட்ட பித்அத் ஆகும். ஹதீஸ் கிரந்தங்களை நபி (ﷺ) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்த சட்டங்களை அறிந்துக் கொள்வதற்கும், மற்றவர்களுக்கு படித்துக் கொடுப்பதற்கும், மனனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுவதற்கும்தான் ஓத வேண்டும். அதை விடுத்து புஹாரியை வெறுமனே ஓதுவதை ஒரு வணக்கமாக நினைப்பதும், அதன் மூலம் "பரகத்" ஏற்படுகிறது என்று நம்புவதும், தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன என்று நம்புவதும் அதற்காக நேர்ச்சைகள் செய்வதும், அவைகளை சாப்பிடுவதும் வழிகெட்ட பித்அத் ஆகும்.

புஹாரி சடங்குவாதிகளிடம் புஹாரியில் உள்ள சில ஹதீஸை அமுல் படுத்துவோம் என்று கூறினால், சாட்டுப் போக்குகள் கூறி நழுவிவிடுகிறார்கள். உதாரணமாக நபி (ﷺ) அவர்களின் ரமழான் இரவுத் தொழுகை (தராவிஹ்) எவ்வாறிருந்தது என கேட்கப்பட்ட போது, நபி (ﷺ) அவர்கள் ரமழான் காலத்திலோ, அல்லது ரமழான் அல்லாத காலத்திலோ 11 றக்அத்துக்களுக்கு மேல் தொழவில்லை என ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் கூறினார்கள். (புஹாரி :1147)

புஹாரி சடங்குவாதிகள் இந்த நபிவழி முறையை அவர்களின் பள்ளிகளில் அமுல்படுத்தத் தயாரா?

## மத்ஹபுகள் என்றால் என்ன?

மத்ஹப் என்றால் குர்ஆன், ஹதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவைகளை நேரடியாக விளங்குவதற்கு ஆற்றலுள்ள ஓர் இமாமின் (அறிஞரின்) கருத்து. இவ்வாற்றல் உள்ளவர்கள்: ஸஹாபாக்கள் தாபியீன்கள் காலம் முதல் இந்நவீன காலம்வரை காணப்படுகின்றனர்.

தற்போது உலகில் உள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம் ஷாபியீ, இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் ஆகிய நான்கு இமாம்களை பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர்.

நான்கு இமாம்களின் சீடர்கள் (மாணவர்கள் ) தங்கள் இமாமின் மத்ஹபை பரப்பும் முயற்சியில் ஈடுபடுவதுடன் தனது இமாம் கருத்து தெரிவிக்காத விவகாரங்களில் கருத்து வெளியிடுபவர்களாகவும் குர்ஆன் ஹதீஸ்களுக்கு முரண்படும் தனது இமாமின் கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, குர்ஆன் ஹதீஸ் தீர்ப்புக்களை எடுத்துச் சொல்லக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் காலவோட்டத்தில் மத்ஹப் என்பது *தனிநபர் கருத்து* என்ற நிலையில் இருந்து *தனிநபர் வழிபாடு* என்ற நிலைக்கு விஷ்வரூபம் எடுத்தது. இதனால் நான்கு மத்ஹபுகளும் நான்கு மதங்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டன.

காலத்துக்குக் காலம் தோன்றிய அறிஞர்கள் இதை கண்டித்து மக்களுக்கு குர்ஆன், ஹதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனைகளை வலியுத்தினார்கள்.

தற்காலத்தில் யாருக்கும் குர்ஆன், ஹதீஸை நேரடியாக விளங்கமுடியாது என்ற வாதத்திற்கு "புகஹாக்களின் கருத்துவேறுபாடும் பொதுமக்களின் மத்தியில் அதன் தாக்கமும்" என்ற எமது அரபு நூலில் மறுப்பு எழுதியுள்ளோம்.

## நான்கு மத்ஹபுகளில் ஒன்றை முழுமையாக கட்டாயம் தழுவவேண்டுமா?

குர்ஆன் ஹதீஸை நேரடியாக விளங்க முடியாதவர் அல்லது விளங்கியவர்களின் தீர்ப்புகளுக்குரிய ஆதாரங்களை விளங்க முடியாதவர், தான் மார்க்க அறிஞர் என்று கருதுபவரிடம் மார்க்க சட்டங்களைக் கேட்க வேண்டும். அவ்வறிஞர் சட்டத்தைக் கூறும்போது அதற்குரிய ஆதாரம் என்ன? எது? என்பதை கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஒரு விடயத்தில் ஓர் அறிஞரையும் வேறு விடயத்தில் மற்றொரு அறிஞரையும் நாடிக் கேட்க முடியும். இதற்கு "தல்பீக்" எனக் கூறப்படும். உதாரணமாக வுளுவுடைய விடயத்தில் ஒரு இமாமின் கருத்தையும் தொழுகை விடயத்தில் இன்னுமொரு இமாமின் கருத்தையும் எடுக்கமுடியும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஹாபாக்கள் மத்தியில் ஏகோபித்த கருத்தாகும். இது கூடாது என்ற பிற்காலத்தில் தோன்றிய சில புகஹாக்களின் கூற்று ஆதாரமற்றதாகும். ஆனால் ஒவ்வொரு மத்ஹபிலிருந்தும் தனக்கு இலகுவானதை எடுத்துக்கொள்வது, மனோ இச்சையைப் பின்பற்றும் செயலாகும். மேற்கோள் காட்டப்பட்ட ஏகோபித்த இக்கருத்துக்கு அமைய, நான்கு மத்ஹபுகளில் ஒன்றை முழுமையாக கண்மூடித்தனமாக பின்பற்றுவது கட்டாயமில்லை. கட்டாயம் என்று வாதிடுவது வழிகேடாகும்.

பொது மகன் ஒரு மத்ஹபை முழுமையாக பின்பற்றத் தேவையில்லை என ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த இமாம்களான இஸ்ஸுத்தீன் பின் அப்திஸ்ஸலாம், நவவி, இப்னு ஹஜர் ஹைதமி ஆகியயோர் மார்க்கத் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

ஆதாரம் கவாயிதுல் அஹ்காம் 2:151 ரவ்ளா 11:117 அல்பதாவா அல் குப்ரா 4:304 – 305

எனவே ஒரு விடயத்தில் இமாம் ஷாபிஈயையும் வேறுவிடயத்தில் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்களையும் பின்பற்ற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்ஹப் ஹதீஸுடன் முரண்படும்போது எவ்வாறு நடந்து கொள்வது.

மத்ஹப் ஹதீஸுடன் முரண்படும் போது மத்ஹபை விடுத்து, ஹதீஸை எடுத்துக் கொள்ளவேண்டும் அதேபோன்று, தனது இமாம் ஆதாரமாகக் கொண்ட ஹதீஸ் பலயீனம் எனத் தென்படும்போது, அக்கருத்தை தவிர்த்துக் கொள்ளவேண்டும். இதற்கு பின்வரும் விடயங்களை ஆதாரமாகக் கொள்ளமுடியும்.

(அ) ஹதீஸ் அடிப்படையான ஆதாரம், தனிநபரின் கருத்து ஆதாரமல்ல.

(ஆ) நான்கு இமாம்களும் ஹதீஸை எடுக்குமாறு வலியுத்தியுள்ளார்கள்.

இமாம் ஷாபிஈ:

قال الشافعي : كل ما قلت وكان عن النبي صلى الله عليه وسلم خلاف قولي مما يصح فحديث النبي صلى الله عليه وسلم أولى فلا تقلدوني

رواه ابن أبي حاتم في آداب الشافعي ومناقبه٦٧ –٦٨

(1) "நான் கூறிய கருத்து ஊர்ஜிதமான ஹதீஸுக்கு முரண்பட்டால், ஹதீஸை எடுங்கள், என்னை கண்மூடித்தனமாக பின்பற்றாதீர்கள். ஆதாரம்: ஆதாபுஸ் ஸாபிஈ – இப்னு அபீஹாதிம் பக்கம் : 67 – 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

كل مسألة تكلمت فيها وصح الخبر فيها عن النبي صلى الله عليه وسلم عند أهل النقل بخلاف ما قلت فأنا راجع عنها في حياتي وبعد مماتي (رواه البيهقي في مناقب الشافعي ١ /٤٧٣)

(2)"ஸஹீஹான ஹதீஸுக்கு முரணாக ஏதாவது விடயத்தில் நான் பேசியிருந்தால் நான் உயிரோடிருக்கும் போதும் மரணித்ததன் பின்பும் அக்கருத்தைவிட்டும் மாறிவிட்டேன்." ஆதாரம்: மனாகிபுஸ் ஸாபிஈ - பைஹகி பக்கம்: 1:473

وأما أن نخالف حديثا عن رسول الله (ﷺ) ثابتا عنه فأرجو أن لايؤخذ ذلك علينا إن شاء الله وليس ذلك لأحد ولكن قد يجهل الرجل السنة فيكون له قول يخالفها لاأنه عمد خلافها وقد يغفل المرء ويخطئ في التأويل (الرسالة ٢١٩ الفقرة ٥٩٨/٥٩٩)

(3) "நாங்கள் ஹதீஸுக்கு மனமுரண்டாக மாறு செய்வதில்லை ஆனால் ஹதீஸ் கிடைக்காததன் காரணமாக அல்லது வியாக்கியானத்தில் தவறுவிடுவதன் காரணமாக ஒரு மனிதன் ஹதீஸுக்கு முரண்பட்ட கருத்தைக் கொண்டு தவறு செய்கிறான்." அல்-றிஸாலா பக்கம் : 219 பந்தி : 598-599.

أبوحنيفة : إذا جاء الحديث الصحيح الإسناد عن النبي (ﷺ) أخذنا به (رواه ابن عبدالبر في الانتقاء - ١٤٥)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் அபூஹனீபா: "ஊர்ஜிதமான ஹதீஸ் வந்தால் நாங்கள் எடுப்போம்." அல் இந்திகா- இப்னு அப்துல்பர் பக்கம்: 145

الإمام مالك: جاء رجل إلى مالك فسأله مسألة فقال له: قال رسول الله (ﷺ)

فقال الرجل أرأيت؟ فقال مالك فليحذر الذين يخالفون عن أمره أن تصيبهم فتنة

أو يصيبهم عذاب أليم (سورة النور: ٦٣)

இமாம் மாலிக் : ஊர்ஜிதமான ஹதீஸுக்கு முரண்படுபவர் வேதனை அல்லது ஆபத்து ஏற்படுவதை பயந்து கொள்ளட்டும்" அல் இஹ்காம் இப்னு ஹஸ்ம் பக்கம் 2/790

أحمد بن حنبل : إذا جاء خبر واحد وكان إسناده صحيحا وجب العمل به

(العدة في أصول الفقه للقاضي أبي يعلى : ٨٥٩/٣)

இமாம் அஹ்மத் : "ஊர்ஜிதமான ஹதீஸ் வந்தால், கட்டாயம் அதை எடுக்க வேண்டும்"

அல்-உத்தா - அபூயஃலா பக்கம் 3/859

(இ) "இமாம்கள் எங்களுக்கு எல்லா ஹதீஸ்களும் தெரியும் எனக் கூறவில்லை, அப்படி அவர்களால் கூறவும் முடியாது.

قال الإمام الشافعي : لا نعلم رجلا جمع السنن فلم يذهب منها عليه شيء

(الرسالة ص: ٤٢ الفقرة : ١٣٩)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஹதீஸ்களையும் தெரிந்த நபரை எங்களுக்குத் தெரியாது.'' (ரிஸாலா பக்கம் 42/43)

قال الحافظ بن حجر العسقلاني : غير لائق أن يوصف أحد من الأمة بأنه جمع الحديث جميعه حفظا واتقانا) النكت الوفية للبقاعي)

இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் கூறினார்கள்: ''முஸ்லிம் உம்மத்தில் (சமுதாயத்தில்) ஒருவர் எல்லா ஹதீஸ்களையும் அறிந்திருக்கிறார் என்று கூறமுடியாது.'' (அன்னுகத் அல்வபிய்யா பிகாயி)

(ஈ) மத்ஹபுடன் முரண்படும்போது ஹதீஸை எடுக்கவேண்டும் என ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த இமாம்களாகிய இஸ்ஸுத்தீன் பின் அப்துஸ்ஸலாம், இப்னுஸ்ஸலாஹ், அத்தகி ஸுப்கி, இப்னு ஹஜர் அஸ்கலானி ஆகியோர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

(உ) மத்ஹப்வாதிகள் தங்களுக்குச் சாதகமாக ஹதீஸ் வரும்போது பெரும் ஆனந்தத்துடன் எடுத்துக் கொள்கிறார்கள் அவர்களுக்கு பாதகமாக வரும்போது ஹதீஸை புறக்கணித்து விடுகிறார்கள் இவர்களைப் பற்றி பின்வரும் குர்அன் வசனம் வன்மையாகக் கண்டிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

قال الله تعالى : إذا دعوا إلى الله ورسوله ليحكم بينهم إذا فريق منهم معرضون وإن يكن لهم الحق يأتوا إليه مذعنين
ثم قال : إنما كان قول المؤمنين إذا دعوا إلى الله ورسوله ليحكم بينهم أن يقولوا سمعنا وأطعنا وأولئك هم المفلحون (سورة النور ٤٨ـ ٥١ )

அவர்கள் மத்தியில் தீர்ப்பளிப்பதற்காக அல்லாஹ், அவனின் திருத்தூதர் ஆகியோர்களை நோக்கி அழைக்கப்பட்டால் அவர்களில் ஒரு சாரார் புறக்கணித்து விடுகிறார்கள். சத்தியம், அவர்களுக்கு சாதகமாக இருந்தால், அதை முற்று முழுதாக ஏற்றுக் கொள்கிறார்கள். உண்மையான முஃமீன்கள் அல்லாஹ், திருத்தூதரின் பால் தீர்ப்புக்காக அழைக்கப்பட்டால், செவிமடுத்தோம் அடி பணிந்தோம் என்று கூறுவார்கள். அவர்கள்தான் ஜெயம் பெற்றவர்கள். (அன்நூர் 47–54)

## ஊர்ஜிதமான ஹதீஸின் வகைகளும் நிபந்தனைகளும்

ஊர்ஜிதமான ஹதீஸ் இரண்டுவகைப்படும்.

(அ) ஊர்ஜிதமான ஹதீஸ் தரம் I அது ஸஹீஹான ஹதீஸ் எனக் கூறப்படும். அதற்குரிய நிபந்தனைகள் ஐந்து: –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) ஹதீஸ் அறிவிப்பாளர் தொடரில் உள்ளஅனைவரும் நம்பத்தகுந்தவர்களாக இருத்தல்
(2) அறிவிப்பாளர் நூறு வீதம் மனன சக்தி உள்ளவராக அல்லது ஹதீஸை ஏட்டில் பிழை இல்லாமல் எழுதக் கூடியவராக இருத்தல்.
(3) ஒவ்வொரு அறிவிப்பாளரும் தனது ஹதீஸ் ஆசிரியரிடத்தில் ஹதீஸை நேரடியாக பெற்றிருத்தல் வேண்டும்.
(4) அறிவிப்பாளரின் அறிவிப்பு தன்னை விட நம்பத்தகுந்த அல்லது மனன சக்தி கூடிய ஒருவருடைய ஹதீஸுக்கு முரண்படாதிருத்தல்.
(5) அறிவிப்பாளர் தொடரில் மறைமுகமான வடு அல்லது குறை காணப்படாதிருத்தல் (உதாரணமாக) ஒரு ஸஹாபியின் தனிப்பட்ட கருத்தை தவறுதலாக நபி (ﷺ) அவர்கள் கூறியதாக ரியாவாயத்துச் செய்வதாகும்.)
(ஆ) ஊர்ஜிதமான ஹதீஸ் தரம் II இது ஹதீஸ் ஹஸன் என சொல்லப்படும். ஸஹீஹான ஹதீஸுக்கும் ஹஸனான ஹதீஸுக்கும் இரண்டாம் நிபந்தனையில் மாத்திரம் வித்தியாசம் உண்டு. ஹதீஸ் ஹஸன் அறிவிப்பாளர் நூறு வீதம் மனன சக்தி உள்ளவராக இருக்கமாட்டார் அதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று குறைந்தவராக இருப்பார்.

பல ஹஸனான ஹதீஸ்கள் சேர்ந்து ஸஹீஹ் லிகைரிஹி ஹதீஸ் நிலைக்கு தரம் உயர வாய்ப்புண்டு.

## ளயீபான (ஊர்ஜிதமற்ற) ஹதீஸ் என்றால் என்ன?

ஸஹீஹ், ஹஸன், ஆகியவற்றிற்கு கூறப்பட்ட ஐந்து நிபந்தனைகளில் ஒன்றை இழக்கும் பட்சத்தில் அதை ளயீப் (ஊர்ஜிதமற்ற) ஹதீஸ் எனக் கூறப்படும்.

ஆனால், பொய்யர் என அல்லது ஹதீஸில் மிக்க கூடுதலாக தவறுகள் இழைப்பவர் என குற்றம் சாட்டப்பட்ட அறிவிப்பாளர் இல்லாத, பல ளயீபான ஹதீஸ்கள் கூட்டாகச் சேர்ந்து, ஹஸன் லிகைரிஹி என்ற தரத்தை அடைய வாய்ப்புண்டு. ஆனால் இத்தரத்தை அடையக்கூடிய பலயீனமான ஹதீஸ்கள் அபூர்வமாகவே காணப்படுகின்றன, அவை மிக நுணுக்கமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ளயீபான (ஊர்ஜிதமற்ற) ஹதீஸை இஸ்லாமிய சட்டத்துக்கு ஆதாரமாகக் கொள்ளலாமா?

ஊர்ஜிதமற்ற ஹதீஸை சட்டத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பதில் இமாம்கள் மத்தியில் ஏகோபித்த கருத்து உள்ளது.(ஷர்ஹுல் முஹத்தப் –1/59, ஷரஹு ஸஹீஹ் முஸ்லிம் 1/85)

ளயீபான (ஊர்ஜிதமற்ற) ஹதீஸை அமல்களின் சிறப்புக்களில் எடுத்துக் கொள்ளலாமா?

அமல்களின் சிறப்புகளில், பக்தி,அல்லது இறைவன் தண்டனையில் பயம் ஆகியவைகளை ஏற்படுத்துவதில் ளயீபான ஹதீஸை உபயோகிக்க முடியுமா? என்பதில் இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாடு உண்டு.

### முதலாவது கருத்து:

பொதுவாக எந்த நிலையிலும் ளயீபான ஹதீஸை எடுக்கமுடியாது. இக்கருத்தை, இப்னு மயீன், புஹாரி, முஸ்லிம், அபூஷாமா, ஷாதுபி ஆகியோர் கொண்டிருக்கிறார்கள். எனவே, அமல்களின் சிறப்புகளில் ளயீபான ஹதீஸை எடுப்பதில் இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாடு கிடையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இமாம் நவவியின் வாதம் தவறானது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

## இரண்டாவது கருத்து:

மூன்று நிபந்தனைகளுக்கு உட்படும்பட்சத்தில் அமல்களின் சிறப்புக்களில் ளயீபான ஹதீஸை எடுத்துக் கொள்ளலாம். இக்கருத்தை பிற்காலத்தில் தோன்றிய சில ஹதீஸ்கலை வல்லுனர்கள் ஆதரிக்கிறார்கள்.

அந்நிபந்தனைகள் பின்வருமாறு:

1. ஹதீஸின் பலயீனம் கடுமையாக இல்லாமலிருத்தல் வேண்டும். எனவே ஹதீஸில் பொய் கூறுபவர்கள், சாதாரன பேச்சில் பொய் பேசுபவர்கள், ஹதீஸில் ஏராளமான தவறுகளைப் புரிபவர்கள் போன்றோர்களின் ஹதீஸ்களை அமல்களின் சிறப்புகளில் கூட எடுக்கமுடியாது.

2. ஏற்கனவே ஷரீஅத்தில் நடைமுறையில் இருக்கும் ஓர் அடிப்படைக்குள், அந்த ளயீபான ஹதீஸ் அடங்க வேண்டும். அதாவது மார்க்கத்தில் புதிய வணக்கத்தையோ, அல்லது வணக்கத்தின் புதிய முறையினையோ, அல்லது வணக்கத்தில் மேலதிக எண்ணிக்கையையோ, அந்த ளயீபான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் உருவாக்கக் கூடாது.

3. ளயீபான ஹதீஸை அமல்களின் சிறப்புகளில் எடுத்துச் செயற்படும்போது இதை நிச்சயமாக நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். என்று நம்பாமல், சில வேளை நபியவர்கள் கூறியிருக்கலாம். என்ற ஐயப்பாட்டுடன் செயல்பட வேண்டும்.

## ஆதாரமுள்ள கருத்து:

இவ்விரு கருத்துக்களில் ளயீபான ஹதீஸை அமல்களின் சிறப்புகளில் எடுக்க முடியாது என்பதே சரியான கூற்றாகும். இதனை பின்வரும் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன:

1. ளயீபான ஹதீஸ், நபியவர்கள் கூறினார்களா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டு மார்க்க விடயங்களை அமைக்கமுடியாது.

قال الله تعالى: وإن الظن لايغني من الحق شيئا (سورة النجم: ٢٨)

நிச்சயமாக சந்தேகத்தின் மூலம் சத்தியத்தை ஊர்ஜிதப்படுத்த முடியாது.

(அல்குர்ஆன் – அந்நஜ்ம் – 28)

عن أبي هريرة رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال :

إياكم والظن فإن الظن أكذب الحديث.

( رواه البخاري : ٦٠٦٦ ومسلم : ٦٤٨٢ )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகத்தை தவிர்ந்து கொள்ளுங்கள், சந்தேகம் பெரும் பொய்யான தகவலாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(புஹாரி – ஹதீஸ் இல: 6066 –
முஸ்லிம் ஹதீஸ் இல: 6482)

2. கர்ராமிய்யா என்ற வழிகெட்டபிரிவினர் அமல்களின் சிறப்பில், ஹதீஸை இட்டுக்கட்டலாம் என்ற பயங்கரமான கருத்தைக் கொண்டிருந்தனர். இப்பிரிவினரின் மறைமுகமான தாக்கவிளைவே, அமல்களின் சிறப்பில் ளயீபான ஹதீஸை எடுக்கலாம் என்ற வாதமாகும்.

3. மூன்று நிபந்தனைகளுடன் ளயீபான ஹதீஸை எடுக்கலாம் என்ற வாதம் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனெனில் மூன்று நிபந்தனைகளும் அடங்கிய ளயீபான ஹதீஸ் இல்லை என்றே கூறவேண்டும். மேலும், பொதுமக்களுக்கு ளயீபான ஹதீஸ்களைக் கற்றுக்கொடுக்கும் போது அவர்கள் நபியவர்கள் கூறியதாகவே நம்புகிறார்கள். இதனால் பொய்யான ஹதீஸ்கள், மூடநம்பிக்கைகள், பிற்போக்குச் சிந்தனைகள், பகுத்தறிவுக்கு முரணான கற்பனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்கள், மார்க்க விடயங்களை மயக்கமான நிலையில் அணுகும் வழிமுறைகள் ஆகியன சமூகத்தில் பரவ வாய்ப்புண்டு.

## நபி (ﷺ) அவர்களின் செயற்பாடுகளின் வகைகள்

நபி (ﷺ) அவர்களின் செயற்பாடுகளை சுருக்கமாக மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. நபி (ﷺ) அவர்கள் வணக்க ரீதியாக செய்தவைகள் அதாவது வாஜிப் (கடமை) அல்லது முஸ்தஹப் (விரும்பத்தக்கது) என்ற அடிப்படையில் செய்தவையாகும். இவை "சுன்னா தஅப்புதிய்யா" என்று சொல்லப்படும். இவற்றை நாங்கள் சட்டவாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். இதை பின்வரும் ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன:

عن مالك بن الحويرث رضي الله عنه قال. قال رسول الله صلى الله عليه وسلم : صلوا كما رأيتموني أصلي. ( رواه البخاري: ٦٣١ ومسلم : ١٥٣٥ )

(அ) எவ்வாறு நான் தொழுவதைக் கண்டீர்களோ அவ்வாறு தொழுங்கள், என்று நபி (ﷺ) அவர்கள் கூறியதாக மாலிக்பின் ஹுவைரிஸ் (رضي الله عنه) அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்கள்.
(புஹாரி ஹதீஸ் இல: 631 முஸ்லிம் ஹதீஸ் இல: 1535)

عن جابر بن عبد الله ﴿ﷺ﴾ قال، قال رسول الله ﴿ﷺ﴾ :

خذوا عني مناسككم (رواه مسلم: ٣١٢٤ والنسائي: ٣٠٦٢)

(ஆ) உங்களுடைய ஹஜ்வணக்கங்களை என்னிடத்தில் இருந்து எடுத்துக்கொள்ளுங்கள். என்று நபி (ﷺ) அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) அவர்கள் கூறினார்கள்.
(முஸ்லிம் ஹதீஸ் இல: 3124 நஸாயீ ஹதீஸ் இல: 3062)

2. நபி (ﷺ) அவர்கள் ஒரு மனித இயல்பு கொண்டவர்கள் என்ற வகையில் செய்தவைகள். இவை "ஸுன்னா ஜிபில்லிய்யா" என்று கூறுப்படும்.

நிற்றல், இருத்தல், உறங்குதல், சவாரி செய்தல், பிரயாணம் செய்தல், தங்குதல், போன்ற மனிதனுக்கு இன்றியமையாத அசைவுகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

நபி (ﷺ) அவர்கள் ஈத்தம்பழத்தைச் சாப்பிட்டார்கள், தேன், பால், ஆகியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தினார்கள், இரண்டு கைகளும் இறுக்கமான ஷாம் தேச ஜுப்பாவை அணிந்தார்கள், கறுத்த தலைப்பாகையுடன் மக்காவில் பிரவேசித்தார்கள் போன்ற மார்க்கத்தில் ஆகுமாக்கப்பட்ட செயல்களும் இவ்வகையில் அடங்கும்.

இவ்வகையில் கூறப்பட்டவைகளை ஏனைய மக்களும் இதேபோன்று செய்ய வேண்டும் என்பது முஸ்தகப்பு (விரும்பத்தக்கது) அல்ல. விரும்பினால் செய்யலாம் விரும்பாவிட்டால் விட்டு விடலாம் எனவே, இவ்வகை முபாஹ் (அனுமதிக்கப்பட்டது) என்பதில் அடங்குமே தவிர வாஜிப் (கடமை) அல்லது முஸ்தஹப் (விரும்பத்தக்கது) என்பதில் அடங்காது.

இந்த அடிப்படையில் கரண்டியால் சாப்பிடக்கூடாது, கையினால் சாப்பிடவேண்டும், உணவுகளை மேசையில் வைத்து கதிரையில் இருந்து சாப்பிடக்கூடாது, சாப்பிடும் போது குறிப்பிட்ட முறையில் இருந்து சாப்பிடவேண்டும், கூட்டாக இருந்து சஹன் சாப்பாடுகள் சாப்பிடவேண்டும். முடியை நடுவால் பிரித்துவாரவேண்டும், முடியை தோற்புயம் வரைநீளமாக வளர்க்க வேண்டும், தலைப்பாகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிய வேண்டும் என்று வாதிப்பது அறியாமையாகும். ஏனெனில் மேற்படி விடயங்களை நபி (ﷺ) அவர்கள் செய்யும்போது தனி மனித விருப்புக்கேற்ப செய்தார்களே தவிர வணக்கரீதியாகச் செய்யவில்லை.

மேலும் மேற்படி விடயங்களில் நபி (ﷺ) அவர்களைப் பின்பற்றுகிறோம் என்று வாதிக்கும் நபர்கள், நபி (ﷺ) அவர்கள் நமக்குக் கற்றுத்தந்த வணக்கமாகச் செய்த விடயங்களைப் புறக்கணிப்பதும் நபி (ﷺ) அவர்கள் கற்றுத்தராத பித்அத்தான வணக்கங்களைச் செய்வதும் வியப்புக்குரிய விடயமாகும்.

3. நபி (ﷺ) அவர்கள் தான் பிறந்து வாழ்ந்த மக்கா நகரைச் சேர்ந்த மக்களின் பழக்கவழக்கத்திற்கேற்ப செயல்பட்டவைகள். இவற்றுக்கு ''ஸுன்னா'' ஆதிய்யா என்று கூறப்படும்.

இந்தவகையும் இரண்டாம் வகையைப் போன்றதுதான் இந்த வகையை ஏனைய மக்கள் செய்யவேண்டும் என்ற வாஜிபோ அல்லது முஸ்தஹப்போ இல்லை விரும்பினால் செய்யலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினால் விட்டு விடலாம்.

இதற்கு பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் கொள்ளலாம். காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நபி (ஸல்) அவர்களுடன் அவர்களின் மனைவி மைமூனா (ரலி) அவர்களிடம் சென்றேன். அன்னையவர்கள் நெருப்பில் சுடப்பட்ட உடும்பை நபி (ஸல்) அவர்களுக்கு சாப்பிடக் கொடுத்தார்கள் அப்போது அங்கிருந்த பெண்மணி ஒருவர் நபியவர்களே, அது உடும்பு இறைச்சி என்று கூறினார். இதைக்கேட்ட நபியவர்கள் சாப்பிட கையை நீட்டியவர்கள், மீண்டும் கையை எடுத்துக் கொண்டார்கள். அதற்கு நான் உடும்பு ஹறாமாக்கப்பட்டதா? எனக் கேட்டேன் அதற்கு நபியவர்கள், இல்லை ஆனால் எனது கூட்டத்தினர் (குறைஷ்கள்) வாழும் பகுதியில் உடும்பு இருக்கவில்லை, அதனால் எனக்கு அது விருப்பமில்லை, எனக் கூறினார்கள். காலித் பின் வலீத் கூறுகிறார்கள் நான் உடும்பைச் சாப்பிட்டேன். நபி (ஸல்) அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள் என்னைத் தடுக்கவில்லை. புஹாரி: ஹதீஸ் இல: 5537 முஸ்லிம் ஹதீஸ் இல: 5009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ﷺ) அவர்கள் தனக்குப் பழக்க மில்லாததால் உடும்பு இறைச்சியைச் சாப்பிடவில்லை என்பதும், காலித் பின் வலீத் அவர்கள் நபியவர்கள் முன்னிலையில் சாப்பிட்டார்கள் என்பதும், நான் சாப்பிடாத ஒன்றை நீங்கள் எப்படி சாப்பிடுவீர்கள் என நபியவர்கள் காலித்பின் வலீதிற்கு கூறவில்லை என்பதும் இங்கு தெளிவாகிறது.

இதன் அடிப்படையில், கோட், ரவுஸர், டை என்பவைகளை அணியக் கூடாது அவை கிறிஸ்தவர்கள் யூதர்களின் உடை என்று வாதிப்பது அறியாமையாகும். நபி (ﷺ) அவர்கள் இரண்டு கைகள் இறுக்கமான ஷாம் நாட்டைச் சேர்ந்த ஆடைகளை அணிந்தார்கள்.

ஆதாரம் : புஹாரி 363, முஸ்லிம்: 628

ஷாம் நாடு என்பது சிரியா, லெபனான், பலஸ்தீன் ஆகிய பகுதிகளைக் குறிக்கும் நபி (ﷺ) அவர்களின் காலத்தில் ஷாம் ரோமர்களாகிய கிறிஸ்தவர்களின் நாடாகயிருந்தது. நபி (ﷺ) அவர்கள் உட்பட மக்கா, மதீனாவில் வாழ்ந்த மக்கள் ஷாம் நாட்டு உடைகளையே பெரும்பாலும் பாவித்து வந்தார்கள்.

அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார்கள் : நபி (ஸல்) அவர்கள் ரோமர்களுக்கு கடிதம் எழுத விரும்பினார்கள். அப்போது, உத்தியோகபூர்வ முத்திரை குத்தப்பட்ட கடிதங்களை மட்டுமே ரோமர்கள் வாசிப்பார்கள் என ஸஹாபாக்கள் கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் "முஹம்மத் அல்லாஹ்வின் தூதர்" என்று பொறிக்கப்பட்ட மோதிரம் ஒன்றை செய்துகொண்டார்கள். (புஹாரி : 65, முஸ்லிம்: 5447)

பிற மதத்தவர்களிடம் காணப்பட்ட உலக விடயங்களை நபி (ஸல்) அவர்கள் எடுத்து பிரயோசனம் அடைந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

மேலும் ஸஹாபாக்கள் எகிப்து, ஷாம், ஈரான் போன்ற நாடுகளைக் கைப்பற்றியபோது அந்நாட்டு மக்களை அவர்களின் உடைகளை மாற்றுமாறோ அல்லது மக்கா, மதீனா வாசிகளின் உடைகளை உடுக்கவேண்டும் என்றோ, அவர்களைக் கேட்டுக்கொள்ளவில்லை.

எனவே, ஒவ்வொரு மனிதனும் அவன் வசிக்கும் காலம் இடம் ஆகியவைகளுக்கு ஏற்ப, இஸ்லாமிய விதிகளுக்கமைய தனது உடைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துகொள்வதற்கு இஸ்லாம் தடை விதிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இந்த அடிப்படையில் இஸ்லாத்துக்கென்று ஒரு தனி உடை இல்லை என்பது தெளிவாகின்றது. மேலும் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் அணியும் உடை இஸ்லாமிய உடை, அது நபி (ﷺ) அவர்களின் உடை என வாதிப்பதும் அறியாமையாகும்.

யூதர்கள், கிறிஸ்தவர்களுக்கு முரண்பட வேண்டும் என்ற ஹதீஸ்கள், அவர்களின் வணக்கவழிபாடுகள், திருநாட்கள் போன்றவற்றில் முரண்படுவதையே குறிக்கும் அதற்கு உதாரணங்கள் பின்வருமாறு.

(அ) கிறிஸ்தவர்கள் யேசுநாதரின் (ஈஸா நபியின்) பிறந்த நாளை வருடாந்தம் கொண்டாடுகிறார்கள். அதைப்பின்பற்றி சில முஸ்லிம்கள் நபி (ﷺ) அவர்களின் பிறந்த நாளை ரபீஉல் அவ்வல் மாதம் கொண்டாடுகிறார்கள். இது வழிகெட்ட பித்அத் ஆகும்.

(ஆ) கிறிஸ்தவ பாதிரிகள், முனிவர்கள், மணிக் கோர்வையை துதிப்பதற்கு பயன்படுத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பின்பற்றி சில முஸ்லிம்கள் திக்ர் செய்வதற்கு தஸ்பீஹ் கோர்வையைப் பயன்படுத்துகிறார்கள். உங்களுடைய பாவங்களை கணக்கிட்டுப் பாருங்கள் உங்களுடைய நன்மைகள் தப்பிப்போகாது என்பதற்கு நான் உத்தரவாதமளிக்கின்றேன். என இப்னு மஸ்ஊத் (ﷺ) அவர்கள் பொடிக்கற்களால் தஸ்பீஹ் செய்பவர்களை நோக்கிக் கூறினார்கள். (அத்தாரிமி ஹதீஸ் இல: 204)

(இ) யூதர்கள், கிறிஸ்தவர்கள், அவர்களில் நல்லடியார்கள் மரணித்தால், அவர்களின் மண்ணறையில் வணக்கஸ்தலங்களை ஞாபகார்த்த மண்டபங்களை கட்டினார்கள். அதேபோல் சில முஸ்லிம்கள் அவ்லியாக்கள் என்று அழைக்கப்படுகின்ற நல்லடியார்களின் கப்றுகளில் தர்ஹாக்களை கட்டுகிறார்கள்.

இது அனைத்து இமாம்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹதீஸ்களுக்கு முரணான செய்கையும் முஸ்லிம்கள் மத்தியில் ஷிர்க் என்ற இறை இணைவைப்புக்கு வழிவகுப்பதுமாகும்.

இவை போன்ற விடயங்களில் யூத கிறிஸ்தவ கலாச்சாரத்தை பின்பற்றிக்கொண்டு உடைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு முரண்படுகிறோம் என்று கூறுவது நகைப்புக்குரிய விடயமாகும்.

## வணக்கம் வேறு, மனித இயல்பு வேறு என்பதற்கு ஆதாரம் உண்டா?

நபி (ﷺ) அவர்கள் வணக்கரீதியாகச் செய்தவைகள் வாஜிப் (கடமை) அல்லது முஸ்தஹப் (விரும்பத்தக்கது) என்ற சட்டங்களுக்குள் அடங்கும். நபி (ﷺ) அவர்கள் மனித இயல்பு அல்லது பழக்கம் என்ற அடிப்படையில் செய்தவைகள் முபாஹ் (விரும்பினால் செய்யலாம் அல்லது விடலாம்) என்ற சட்டத்தில் அடங்கும்.

இதற்கு ஆதாரமாக பின்வரும் குர்ஆன் வசனங்கள் ஹதீஸ்கள் அமைகின்றன.

قال الله تعالى: قل إنما أنا بشر مثلكم يوحى إلي أنما إلهكم إله واحد (سورة الكهف: ١١٠)

1. நான் உங்களைப் போன்ற மனிதன்தான் உங்களின் வணக்கத்திற்குரிய இறைவன் ஒருவன் தான், என எனக்கு வஹி அறிவிக்கப்படுகிறது. என்று நபியே கூறுவீராக: (அல் – கஹ்ப்: 110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

قل لا أقول لكم عندي خزائن الله ولا أعلم الغيب ولا أقول لكم إني ملك
إن أتبع إلا ما يوحى إلي (سورة الأنعام ٥٠)

2. என்னிடத்தில் அள்ளாஹ்வின் பொக்கிஷங்கள் இருப்பதாகவோ, மறைமுகமான விடயங்கள் எனக்குத் தெரியுமென்றோ, நான் ஓர் அமரர் என்றோ, கூறமாட்டேன் என்று நபியே நீர் சொல்வீராக. எனக்கு வஹீ (இறைதூது) அறிவிக்கப்பட்ட விடயங்களை மாத்திரம் தான் பின்பற்றுவேன்.

(அல் அன்ஆம் -50)

عن رافع بن خديج رضي الله عنه قال : قال رسول الله صلى الله عليه وسلم إنما أنا بشر إذا أمرتكم بشيئ من دينكم فخذوا به، وإذا أمرتكم بشيئ من رأي فإنما أنا بشر

رواه مسلم : ٦٠٨٠

3. நான் ஒரு மனிதன்தான், உங்கள் மார்க்கத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தைக் கொண்டு கட்டளையிட்டால் எடுத்துக் கொள்ளுங்கள் (உலக நன்மைகளுடன் சம்பந்தப்பட்ட) ஒரு விடயத்தை (எனது) சுயகருத்துப்படி உங்களுக்கு கட்டளையிட்டால் (விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம் அல்லது விட்டு விடலாம்) ஏனெனில் நான் (உலகவிடயங்களில் தவறிழைக்கக் கூடிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் என நபி (ﷺ) அவர்கள் கூறியதாக ராபிஃ பின் கதீஜ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் ஹதீஸ் : 6080)

عن عبد الله بن مسعود رضي الله عنه قال . قال رسول الله صلى الله عليه وسلم : إنما أنا بشر أنسى كما تنسون فإذا نسيت فذكروني الحديث

(رواه البخاري : ٤٠١ ومسلم : ١٢٧٤)

4. நான் உங்களைப் போன்ற மனிதன்தான் நீங்கள் மறப்பதுபோல் நான் மறப்பேன், எனவே நான் மறந்தால் எனக்கு ஞாபகப்படுத்துங்கள் என்று நபி (ﷺ) அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். புஹாரி ஹதீஸ் இல: 40, முஸ்லிம் ஹதீஸ் இல: 1274

٥- عن أنس بن مالك (ﷺ) قال: قال رسول الله (ﷺ) إنما أنا بشر أرضى كما يرضى البشرو أغضب كما يغضب

(رواه مسلم ٦٥٧٠ )

5. நான் ஒரு மனிதன், ஏனைய மனிதர்கள் திருப்தி அடைவதுபோல் நானும் திருப்தி அடைகிறேன். ஏனைய மனிதர்கள் கோபமடைவதுபோல் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமடைகின்றேன் என நபி (ﷺ) அவர்கள் கூறியதாக அனஸ் (ﷺ) அவர்கள் கூறுகிறார்கள். முஸ்லிம் ஹதீஸ் இல: 6570

عن عائشة (رضي الله عنها) قالت قال النبي (ﷺ) اللهم إنما أنا بشر فأى المسلمين لعنته أو سببته فاجعله له زكاة وأجرا

(رواه مسلم ٦٥٥٧)

6. நான் ஒரு மனிதன், எந்த ஒரு முஸ்லிமுக்கும் நான் சபித்திருந்தால் அல்லது ஏசியிருந்தால் (இறைவா) அதை கூலியாகவும் பரிசுத்தமாகவும் மாற்றி விடுவாயாக என்று நபி (ﷺ) அவர்கள் பிரார்த்தித்தார்கள். என ஆயிஷா (رضي الله عنها) அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் ஹதீஸ் இல: 6557)

عن أم سلمة (رضي الله عنها) قالت : قال رسول الله (ﷺ) إنما أنا بشر وإنه يأتيني الخصم فلعل بعضكم أن يكون أبلغ من بعض فأحسب أنه صدق وأقضي له بذلك فمن قضيت له بحق مسلم فإنما هي قطعة من النار فليأخذها أو ليتركها (رواه البخاري ٢٤٥٨ ومسلم ٤٤٥٠)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நான் ஒரு மனிதன், ஒரு (பொய்) வாதி, தனது வாதத்திறமையினால் அவன் உண்மை கூறுகிறான் என நினைத்து அவனுக்குச் சார்பாக நான் தீர்ப்பளிக்கலாம் அவ்வாறு பெறப்பட்ட பிறரின் உரிமை, நரகத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புத்தனலாகும் என நபி (ﷺ) அவர்கள் கூறியதாக, உம்மு ஸலமா (رضي الله عنها) அவர்கள் அறிவிக்கிறார்கள். புஹாரி ஹதீஸ் இல: 2458, 7169 முஸ்லிம் ஹதீஸ் இல: 4450

இந்த ஆதாரங்கள் மூலமாக, நபி (ﷺ) அவர்கள், மனித இயல்பு, பழக்கங்கள் என்பவற்றில் எங்களைப் போன்ற மனிதர் என்பதும், வஹீ என்ற இறை தூது மூலம் எங்களைவிட்டும் வேறுபட்டு அள்ளாஹ்விடத்தில் உயர்ந்த அந்தஸ்தை அடைந்துள்ளார்கள் என்பதும் வஹீ மூலம் அன்னாருக்கு அறிவிக்கப்பட்ட விடயங்கள் மாத்திரமே எங்களுக்கு மார்க்கமாக்கப்பட்டவை என்பதும் தெளிவாகிறது. எனவே, நபி (ﷺ) அவர்கள் மனித இயல்பு, பழக்கங்களின் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த ஒரு விடயத்தை ஒரு நபர் வணக்கமாகச் செய்தால், வெளிரங்கத்தில் அவர் நபி (ﷺ) அவர்களைப் பின்பற்றுவதாகத் தோன்றினாலும் யதார்த்தத்தில் பித்அத் ஒன்றைச் செய்வதாகவே கணிக்கப்படும்.

لقد كان لكم في رسول الله أسوة حسنة (سورة الأحزاب :٢١)

" அல்லாஹ்வின் தூதரிலே உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது."

(அஹ்ஸாப் -12)

நபி (ﷺ) அவர்கள், மார்க்கமாக்கப்பட்ட விடயங்களில் எங்களுக்கு முன்மாதிரியாக உள்ளார்கள் என்பதை இத்திருவசனம் உணர்த்துகிறது. இங்கே மார்க்க விடயங்கள் என்று கூறும்போது, கடமையாக்கப்பட்ட (வாஜிப்), விரும்பத்தக்க (முஸ்தஹப்), அனுமதிக்கப்பட்ட (முபாஹ்) விடயங்களைக் குறிக்கும். நபி (ﷺ) அவர்கள் வாஜிபான விடயங்களைச் செய்தும், முஸ்தஹப்பான விடயங்களைச் செய்தும், முபாஹான விடயங்களைச் செய்தும் எங்களுக்கு முன்மாதிரியாக இருந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில், முபாஹான விடயங்களில் ஒன்றான, மனித இயல்புகள், விருப்புகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தும் எங்களுக்கு முன்மாதிரியாக இருந்திருக்கிறார்கள். அழகிய முன்மாதிரி என்பதில் வாஜிப், முஸ்தஹப் மட்டுமல்ல, முபாஹ் என்பதும் அடங்கும். ஆனால் நபி (ﷺ) அவர்களுக்கு வழங்கப்பட்ட நான்கிற்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்தல் போன்ற விஷேட சலுகைகள், (கஸாயிஸ்) அழகிய முன்மாதிரி என்பதில் அடங்காது.

عن ابـــن عمر ﴿رضي الله عنه﴾ قال: أن رســول الله ﴿ﷺ﴾ أناخ بالبطحاء بذى الحليفة فصلى بها وكان عبدالله بن عمر ﴿رضي الله عنه﴾ يفعل ذلك (صحيح البخارى - ٤٨٤ ومســلم ٤٤٥٠)

فرأيت رسول الله صلى الله ﴿ﷺ﴾ يتتبع الدباء من حوالى الصحفة فلم أزل أحب الدباء منذ يومئذ .

(صحيح البخارى ٥٣٧٩ وصحيح مسلم ٥٢٩٣)

நபி (ﷺ) அவர்கள் ஒட்டகத்தை அமர்த்திய இடத்தில் இப்னு உமர் (رضي الله عنه) அவர்கள் தங்களின் ஒட்டகத்தை அமர்த்தினார்கள் என்பதும், நபி (ﷺ) அவர்கள் சுரக்காய் சாப்பிடுவதைக் கண்டதன் பின்பு நானும் சுரக்காயை விரும்பினேன் என்று அனஸ் (رضي الله عنه) அவர்கள் கூறியதும் முபாஹ் (ஆகும்) என்பதைக் குறிக்குமே தவிர வணக்கம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்தஹப் (விரும்பத்தக்கது) என்பதில் அடங்காது. இப்னு உமர் : புஹாரி : 5369 முஸ்லிம் : 5293 அனஸ் புஹாரி 1532 முஸ்லிம் 3269

ஏனெனில், ஏனைய ஆயிரக்கணக்கான ஸஹாபாக்கள் நபி (ﷺ) அவர்களின் மனித இயல்பு, பழக்கம் பேன்ற விடயங்களை அதேபோன்று செய்யவில்லை.

பிரபல்யமான நடிகர்கள், பாடகர்கள் அணிவதுபோன்று வாலிபர்களும் அணிவது போல் ஏன் எங்கள் நபியை நாங்கள் பின்பற்றக் கூடாது என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். நாங்கள் அணியக் கூடாது எனக் கூறவில்லை அவ்வாறு அணிவது வணக்கம் அது இஸ்லாமிய உடை என்று விவாதிப்பதையே எதிர்க்கின்றோம். அடுத்ததாக இஸ்லாத்துக்கு அப்பாற்பட்ட நபர்களை இஸ்லாமிய சட்டங்களுக்கு முன்மாதிரியாகக் கொள்வது அழகல்ல மேலும், குர்ஆன், ஹதீஸுக்கு முரணாக அமையும், ஸஹாபியின் கூற்று செயல் ஆகியவைகளை ஆதாரத்துக்கு எடுக்க முடியாது என்பது இமாம்கள் மத்தியில் ஏகோபித்த முடிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கம் பழக்கம் இரண்டுக்கும் இடம்பாடான செய்கைகள்

நபி ﷺ அவர்கள் செய்த செயல் ஒன்று, அன்னாரவர்கள் வணக்கரீதியாகச் செய்தார்களா? அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப செய்தார்களா? என்பதில், சில நேரங்களில் அறிஞர்கள் மத்தியில், கருத்து வேறுபாடு ஏற்படுவது உண்டு.

عن جابر بن عبدالله ﷺ قال: كان النبي ﷺ

إذا كان يوم عيد خالف الطريق ( رواه البخاري ٩٨٦)

உதாரணமாக, நபி ﷺ அவர்கள், பெருநாள் தொழுகைக்குச் செல்லும் போது ஒரு பாதைவழியாகவும், திரும்பிவரும் போது, வேறொரு பாதை வழியாகவும் வருவார்கள் என ஜாபிர் ﷺ அவர்கள் அறிவிக்கிறர்கள்.

(புஹாரி – ஹதீஸ் இல: 986)

மேற்படி செயலை நபி ﷺ அவர்கள் வணக்க ரீதியாகச் செய்தார்கள், நாமும் அதுபோல செய்யவேண்டும் என மாலிக், ஷாபிஈ, அஹ்மத் போன்ற இமாம்கள் கூறுகிறார்கள். ஆனால் உறவினர்கள், நண்பர்களை பெருநாள் தினம் சந்திப்பதற்காக, பாதையை மாற்றியிருக்கலாம், நாமும் அவ்வாறு செய்ய வேண்டியதில்லை என வேறு சில இமாம்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார்கள்.

இச்சந்தர்ப்பத்தில், ஹதீஸுடன் தொடர்புள்ள, சூழ்நிலை ஆதாரங்களை மையமாகவைத்துத்தான் வணக்கத்தில் சேருமா அல்லது பழக்கத்தில் சேருமா என்ற முடிவை எடுக்கவேண்டும். அவ்வாறான ஆதாரங்கள் கிடைக்காவிடில், எந்த ஒரு முடிவும் எடுக்காமல் இருப்பது நன்று.

## நபி (ﷺ) அவர்களின் செயற்பாடுகளில் சேர்க்கப்படுபவைகள் எவை?

நபி (ﷺ) அவர்களின் செயற்பாடுகளில் பின்வரும் அம்சங்கள் அடங்கும் :

1) அல் இஷாரா (கையைக் காட்டுதல்)

عن عائشة رضي الله عنها أنها قالت : صلى رسول الله صلى الله عليه وسلم فى بيته وهو شاك فصلى جالسا وصلى وراءه قوم قياما فأشار إليهم أن اجلسوا فلما إنصرف قال : إنما جعل الإمام ليؤتم به ......... رواه البخاري برقم : ٦٨٨٠ ومسلم برقم : ٩٢٥

நபி (ﷺ) அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது, வீட்டில் இருந்த வண்ணம் தொழுதார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து சிலர் நின்று தொழுதனர். இருந்து தொழுமாறு அவர்களை நோக்கி நபியவர்கள் கையைக் காட்டினார்கள். புஹாரி ஹதீஸ் இல: 688, முஸ்லிம் ஹதீஸ் இல: 925



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) அல் கிதாபா (எழுதுதல்): ஸகாத், ஏனைய ஷரீஅத் சட்டங்கள் சம்பந்தமாக, நபி ﷺ அவர்கள் தனது கவர்னர்களுக்கு எழுதிய ஓலைகள்.

3) அத்தர்க் (செய்யாமல் விடுதல்):

عن ابن عباس رضي الله عنهما أن النبي صلى الله عليه وسلم خرج يوم الفطر فصلى ركعتين لم يصل قبلهما و لا بعدهما

(رواه البخاري برقم :٩٨٩ ومسلم برقم :٢٠٥٤)

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: நபி ﷺ அவர்கள் நோன்புப் பெருநாள் தினம் வெளியேறி இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். (ஆனால்) முந்திய, பிந்திய (சுன்னத்தான) தொழுகைகளைத் தொழவில்லை. புஹாரி ஹதீஸ் இல: 989, முஸ்லிம் ஹதீஸ் இல: 2054.

4) அல் – ஹம் (செய்யமுனைந்து செய்யாமல் விடல்):

عن أبي هريرة رضي الله عنه قال : .......... لقد هممت أن آمر بالصلاة فتقام ثم آمر رجلا فيصلي بالناس ثم أنطلق معي رجال معهم حزم من الحطب إلى قوم لا يشهدون الصلاة فأحرق عليهم بيوتهم بالنار

رواه البخاري برقم : ٦٤٤ ومسلم برقم : ١٤٨٠ واللفظ له

அபூஹுறைரா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: .... தொழுகையை ஜமாஅத்துடன் தொழாதவர்களின் வீடுகளை எரிக்க நினைத்தும் செய்யாது விட்டு விட்டேன். புஹாரி ஹதீஸ் இல: 644, முஸ்லிம் ஹதீஸ் இல: 1480.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபி (ﷺ) அவர்களின் அங்கீகாரம் என்றால் என்ன?

நபி (ﷺ) அவர்களின் அங்கீகாரத்தை பின்வரும் முறைகளில் அறிந்துகொள்ள முடியும்:

அ) நபி (ﷺ) அவர்களின் முன்னிலையில் இவ்வாறு செய்தேன், நான் இவ்வாறு கூறினேன், இன்னார் நபிகளார் முன்னிலையில் இவ்வாறு செய்தார், இவ்வாறு கூறினார், நபிகளார் அதுபற்றி எவ்வித அதிருப்தியும் தெரிவிக்கவில்லை என ஒரு ஸஹாபி அறிவிப்பதாகும்.

عن ابن عباس رضي الله عنهما قال : أهدت أم حفيد – خالة ابن عباس – إلى النبي صلى الله عليه وسلم أقطا وسمنا وضبا فأكل النبي صلى الله عليه وسلم من الأقط والسمن وترك الأضب تقذرا قال ابن عباس : فأكل على مائدة رسول الله صلى الله عليه وسلم ولو كان حراما ما أكل على مائدة رسول الله صلى الله عليه وسلم.

رواه البخاري برقم:٦٥٧٥ ومسلم برقم:٥٠١٣

இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் கூறுகிறார்கள்: உம்மு ஹுபைத் என்ற பெண்மனி, நபி (ﷺ) அவர்களுக்கு பாலாடைக்கட்டி, நெய், உடும்பு ஆகியவைகளை அன்பளிப்பாக வழங்கினார்கள். நெய், பாலாடைக்கட்டி என்பவற்றிலிருந்து சாப்பிட்டார்கள். அருவருப்பெனக் கருதி உடும்பை சாப்பிடாமல் விட்டுவிட்டார்கள். ஆனால் அதே மரவையில் ஏனையவர்கள் உடும்பைச் சாப்பிட்டார்கள். உடும்பு ஹராமாயிருந்திருந்தால் நபியவர்கள் மரவையில் யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டிருக்கமாட்டார்கள்.
புஹாரி ஹதீஸ் இல: 2575, முஸ்லிம் ஹதீஸ் இல:5013

இவ்வகையான நபி (ﷺ) அவர்களின் அங்கீகாரத்தை ஆதாரமாகக் கொள்ளலாம் என்பதில் இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாடு கிடையாது. இதை சில குர்ஆன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

يأيها الرسول بلغ ما أنزل إليك من ربك وإن لم تفعل فما بلغت رسالته والله يعصمك من الناس (سورة المائدة: ٦٧ )

"அல்லாஹ்வின் தூதரே! உமது இரட்சகனிடமிருந்து உங்களுக்கு இறக்கிவைக்கப்பட்டதை எத்திவைப்பீர்களாக, நீங்கள் அவ்வாறு செய்யாவிடின் அவனது தூதை எத்திவைத்தவர்களாகமாட்டீர்கள், அல்லாஹ் உங்களை மனிதர்களிடமிருந்து பாதுகாப்பான்.
மாயிதா : 67

الذين يتبعون الرسول النبي الأمي الذي يجدونه مكتوبا عندهم في التوراة والإنجيل يأمرهم بالمعروف وينهاهم عن المنكر

(سورة الأعراف :١٥٧ )

"................... அவரைப்பின்பற்றுபவர்களை நன்மையைக்கொண்டு கட்டளையிடுவார்கள், தீமையை விட்டும் தடுப்பார்கள். (அஃராப் : 157)

அல்லாஹ்வால் பாதுகாப்பு வழங்கப்பட்ட நபி யாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயப்படமாட்டார் என்பதும், தீமையைக்காணுமிடத்தில் மௌனம்சாதிக்காமல் அதைத் தடுப்பார் என்பதும் இவ்விரு திரு வசனங்களிலிருந்து தெளிவாகிறது.

ஆ) நபி (ﷺ) அவர்கள் காலத்தில் நிகழ்ந்த ஒரு விடயம் அன்னாருக்குத் தெரியவந்ததும், அதைப்பற்றி அவர்கள் ஆட்சேபனை தெரிவிக்காமல் இருப்பதாகும். இவ்வகையான அங்கீகாரமும் ஆதாரத்திற்குரியதாகும்.

عن جابر رضي الله عنه أنه قال : كنا نعزل على عهد نبي الله صلى الله عليه وسلم فبلغ ذلك نبي الله صلى الله عليه وسلم فلم ينهنا عنه.

رواه مسلم برقم :٣٥٤٦

"நாங்கள் நபி (ﷺ) அவர்கள் காலத்தில் "அஸ்ல்" (கர்ப்பப்பையில் விந்து இறங்காமல் தடுத்தல்) செய்துகொண்டிருந்தோம். இது நபியவர்களுக்கு எட்டியது, அன்னவர்கள் எங்களைத் தடுக்கவில்லை."
முஸ்லிம் ஹதீஸ் இல: 3546

இ)நபி (ﷺ) அவர்களின் காலத்திலே இவ்வாறு நாங்கள் கூறிக்கொண்டிருந்தோம், செய்து கொண்டிருந்தோம், மக்கள் நபி (ﷺ) அவர்களின் காலத்தில் இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தார்கள், செய்துகொண்டிருந்தார்கள் என்று ஒரு ஸஹாபி கூறுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை பெரும்பாலான இமாம்கள் அங்கீகாரமாகக் கணித்திருக்கிறார்கள். ஏனெனில், பரவலாக இடம்பெறக்கூடிய விடயங்கள் நபி 《ﷺ》 அவர்களுக்கு எட்டியிருக்க பெரும் வாய்ப்புண்டு என்பதினாலாகும்.

عن ابن عمر رضي الله عنه أنه قال: كنا نخير بين الناس في زمان رسول الله صلى الله عليه وسلم فنخير أبا بكر ثم عمر ثم عثمان بن عفان رضي الله عنهم (رواه البخاري برقم: ٣٦٥٥)

இப்னு உமர் 《رضي الله عنه》 அவர்கள் கூறுகிறார்கள்: "மக்கள் மத்தியில் யார், யாரைவிட சிறந்தவர் என்பதை நபி 《ﷺ》 அவர்கள் காலத்தில் பேசிக்கொள்ளும்போது அபூபக்கர் 《رضي الله عنه》 அவர்களையும் பின்பு உமர் 《رضي الله عنه》 அவர்களையும் பின்பு உஸ்மான் 《رضي الله عنه》 அவர்களையும் மேன்மைப்படுத்துபவர்களாக இருந்தோம்."

புஹாரி ஹதீஸ் இல: 3655.

ஈ) நபி 《ﷺ》 அவர்களின் காலப்பகுதியில் எனக் குறிப்பிடாமல், நாங்கள் செய்துகொண்டிருந்தோம், அவர்கள் செய்துகொண்டிருந்தார்கள் என்று ஒரு ஸஹாபி கூறுவதாகும்.

இதை நபி 《ﷺ》 அவர்களின் அங்கீகாரமாகக் கணித்து ஆதாரமாகக் கொள்ளமுடியும் என்பது புஹாரி, முஸ்லிம், ஹாகிம் போன்ற அதிகமான ஹதீஸ்கலை வல்லுனர்களின் கருத்தாகும். ஏனெனில், ஒரு ஸஹாபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்ற விடயங்களை ஷரீஅத் சட்டத்தின் ஆதாரமாகக் கூறும்பட்சத்தில், நபி (ﷺ) அவர்கள் அவைகளை அறிந்து அங்கீகாரம் வழங்கியிருப்பார்கள் என்பதுதான் மிகைப்பான எண்ணமாகும்.

عن أم عطية رضي الله عنها أنها قالت : كنا لا نعد الكدرة والصفرة شيئا
(رواه البخاري برقم : ٣٢٦)

உம்முஅதிய்யா (رضي الله عنها) என்ற ஸஹாபிப் பெண்மணி பின்வருமாறு கூறுகிறார்கள்: (மாதவிடாய் ஏற்படாத காலப்பகுதியில் தென்படுகின்ற) கருப்பு, மஞ்சளுக்கு சாடையாக உள்ள நீரை நாங்கள் மாதவிடாயாகக் கணிக்காதவர்களாக இருந்தோம்.
புஹாரி ஹதீஸ் இல: 326

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gift of
The Islamic Center
P.O.Box - 10 Kattankudy-30100 SRI LANKA
அன்பளிப்பு
இஸ்லாமிய நிலையம்
த.பெ.இல -10 காத்தான்குடி -30100 ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாருல் ஹதீஸின் இலட்சியமும் செயன்முறையும்

1. ஹதீஸ் கலையை ஒரு துறையாக அறிமுகப்படுத்துவதும் வளர்ப்பதும்.

அறிஞர்கள், அறபுக் கலாசாலை மாணவர்கள், ஹதீஸ் துறை ஆர்வலர்களுக்கு கற்கை நெறிகள், விரிவுரைகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தி நடாத்தல்,

ஹதீஸ் துறை சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், கட்டுரைகள், ஒலி ஒளி நாடாக்கள், துணுக்குகள் என்பவற்றை வெளியிடுதல்,

ஹதீஸ் தகவல் மற்றும் ஆய்வு நிலையமாகத் தொழிற்படல். (நூலக சேவை, ஆய்வு நிலையம்.)

2. ஹதீஸ் துறை சார்ந்த அறிஞர்களை உருவாக்குதல்.

தகுதியானவர்களை இனங்கண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஹதீஸ் துறை சார்ந்த கற்கை நெறிகளில் புலமை பெறுவதற்கு வழிகாட்டுதலும் வழிவகை செய்தலும்,

தெரிவு செய்யப்பட்ட அறபுக் கலாபீட மாணவர்கட்கு ஹதீஸ் துறையில் முழுநேர, பகுதிநேர கற்கை நெறிகளை வழங்குதல்.

ஹதீஸ் துறை மற்றும் அது சார்ந்த நூல்கள் தேவைப்படுவோருக்கு வெளிநாட்டிலிருந்து தருவிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல்.

3. இஸ்லாமிய ஆய்வு நிலையம்

கால சூழ்நிலைக்கேற்ப முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நாட்டின் பல்வேறு இஸ்லாமிய நிறுவனங்கள், அமைப்புக்கள், இயக்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஓர் அமைப்பின் மூலம் குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் ஆய்வு செய்து உரிய தீர்வை முன்வைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

دار الحديث
DARUL HADITH
لقد كان لكم في رسول الله أسوة حسنة

# كيف نتفقه في السنة النبوية؟

( باللغة التاملية )

بقلم

د. أحمد أشرف عمر لبي

رئيس مجلس الإدارة - دار الحديث

أستاذ الحديث المساعد

كلية الشريعة و أصول الدين

جامعة الملك خالد

المملكة العربية السعودية

من منشورات :

دار الحديث

كولومبو

سريلانكا

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# كيف نتفقه في السنة النبوية؟

(باللغة التاميلية)

بقلم :

د. أحمد أشرف عمر لبي

رئيس مجلس الإدارة - دار الحديث

أستاذ الحديث المساعد

جامعة الملك خالد

المملكة العربية السعودية

من منشورات :

دار الحديث

كولومبو،

سريلانكا.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org